பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 29 திங்கட்கிழமை 16.10.2023 கதிர் 339

### மயிலத்தமடு மேய்ச்சல் நிலங்களிலிருந்து

# நீதிமன்றம் மூலம் உத்தரவைப் பெற்றே ஆக்கிரமிப்பாளர்களை அகற்றப் பணிப்பு

### ஜனாதிபதி அதையே சொன்னார் என்கிறார் சாணக்கியன்

மட்டக்களப்பு மாவட்டம் மயிலத்தமடுமேச்சல்தரையைஆக்கிரமித்திருக்கும் சிங்களவர்களை நீதிமன்ற உத்தரவைப்பெற்றுஅங்கிருந்துஅகற்றுமாறே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளார். ஆனால், இது எப்போது நடக்கும்என்றுஉறுதியாகத்தெரியாது.

இவ்வாறுதெரிவித்தார்தமிழ்அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதிசெயலகத்தில்நேற்றுநடைபெற்ற கூட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். கூட்டம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மேச்சல்தரை அபகரிப்பு தொடர்பில் இன்றைய (நேற்று ) ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற சந்திப்பில் கால்நடைப் பண்ணையாளர்க ளின் பிரச்சினை தொடர்பாக எடுத்துக் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

இஸ்ரேல் - பாலஸ்தீனப் போர் காரணமாக பெற்றோலியப் பொருள்களின் விலைகள் அதிகரித்து பெரும் தாக்கத்தை ஏற்படுத்தப்போகின்றது என்று அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். ஆனால், அது எவ்வளவு தூரத்திற்கெல்லாம் தாக்கம் செலுத்தும் என்று வாசகர்ளாகிய உங்களுக்குத் தெரியுமா?தெரிந்தார்ஆச்சரியப்பட்டுப் போய்விடுவீர்கள்.

நாளைக்கு நாளைக்கு என்று பிள்ளையார் கலியாணம் போன்று இழுத்துக்கொண்டே செல்லும் தமிழ் அரசுக் கட்சியின் பொதுக் கூட்டத்தை இந்த வருடம் டிசெம்பர் மாதத்தில் எப்படியாவது நடத்துவது என்று கட்சியினர் முடிவெடுத்திருக்கிறார்கள். அதற்காக கட்சியின் மூலக் கிளைகளைச் சீரமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. ஓரிருகிளைகளின்புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்ற ☞ 2

## பேருந்து மீது கல் வீச்சு




யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவு நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து ☞ 2

## இந்தியப் படுகொலைகளின் நினைவு நாளில் யாழ்ப்பாணத்தில் இசை நிகழ்ச்சி வேண்டாமே

### இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணனிடம் முன்னணி கோரிக்கை

(ந.லோகதயாளன்.)

யாழ்ப்பாணத்தில் இந்திய அமைதி காக்கும் படையினரால் வைத்தியசாலைக்குள் நிகழ்த்தப்பட்ட படுகொலைகளின் நினைவு நாளில், அதனைப்பூசிமெழுகும் வகையில் ஒரு இசை நிகழ்ச்சி நடத்துவதை தவிர்க்கும்படி பிரபல இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணனிடம் கோரிக்கை விடுத்துள்ளது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி.

இசையமைப்பாளர் சந்தோஸ்நாராயணனின் இசைநிகழ்ச்சி ஒக்டோபர் 21, 22 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுவந்தநிலையில் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. இசை நிகழ்ச்சிக்கான திகதிகளை மாற்றியமைக்குமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது:

யாழ்ப்பாணத்தில் இசையமைப்பாளர் சந்தோஸ்நாராயணனின் இசை நிகழ்ச்சிகளை நடாததுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது. ஒடுக்கப்பட்ட மக்களின் குரலினை வெளிக்கொணரும் தங்களின் இசையமைப்பில் உருவான பாடல்களையும் இசையையும் ஈழத் தமிழ் மக்களாகிய நாங்களும் கேட்டு, இரசித்து மகிழ்கிறோம் அந்த வகையில் உங்களுக்கு ஏராளமான இரசிகர்கள் ☞ 2

## மயிலத்தமடுவில் இருந்து சிங்களவர்களை வெளியேற்ற அதிகாரிகளுக்குப் பணிப்பு

### நேற்று கொழும்பில் நடந்த கூட்டத்தில் ரணில் தெரிவிப்பு



(ஹஸ்பர்)

மட்டக்களப்புமாவட்டம் மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் நிலத்தை ஆக்கிரமித்துள்ள சிங்களவர்களை அங்கிருந்துவெளியேற்றி அவர்களுக்கு அவர்களின் சொந்த இடங்களிலேயேகாணிகளை வழங்கும்படி ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று ஜனாதிபதிசெயலகத்தில் இடம்பெற்ற இது தொடர்பான கூட்டத்தில் ஜனாதிபதி ☞ 2

## கனமழை காரணமாக நேற்று பண்டாரவளையில் வெள்ளம்



பண்டாரவளையில் நேற்றுப் பெய்த கன மழை காரணமாக நகரம் வெள்ளத்தில் மூழ்கியது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நேற்றுக் கடும் மழை பெய்தபோதும் பண்டாரவளையில்கனமழை கொட்டியது.

இதனால் நகரம் உடன ☞ 2

## வாரத்தில் மூன்று நாட்கள் மட்டுமே கப்பல் சேவை

### போதிய பயணிகள் இல்லாததால் இந்த முடிவு

(ந.லோகதயாளன்.)

காங்கேசன்துறைக்கும் நாகைபட்டினத்துக்கும் இடையே பயணிகள் கப்பல் சேவைவாரத்தில்மூன்று நாட்கள் மட்டுமே இடம்பெறும்என்றுஅறிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சேவை வாரத்தில 7 நாட்களும் இடம்பெறும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் நேற்று ஞாயிற்றுக் கிழமை கப்ப லில் பயணம் செய்வதற்குப் போதிய முன்பதிவுகள் இருக்காத காரணத்தால் சேவை இடைநிறுத்தப்பட்டது.

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் ☞ 2

## ஜனாதிபதி நேற்றிரவு சீனாவுக்குப் புறப்பட்டார்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றிரவு சீனாவுக்குப் புறப்பட்டார். இன்று முதல் நான்கு நாள் பயணமாக அவர் சீனா சென்றிருக்கிறார்.

இந்தப் பயணத்தின் போது சீனாவில் நடைபெறும் ஒரே தடம் ஒரே பாதை திட்டத்தின் 3ஆவது சர்வதேச ஒத்துழைப்பு மாநாட்டிலும் கலந்துகொள்கிறார் ஜனாதிபதி. அது தவிர இருதரப்புபேச்சுக்களிலும் கலந்துகொள்வார்.

ஜனாதிபதி வெளிநாடு சென்றுள்ள காலப் பகுதியில் அவருக்கு கீழுள்ள அமைச்சுகளின் பொறுப்புகள் இராஜாங்க அமைச்சர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அதன்படி, நாளை (16) முதல் இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன், பாதுகாப்பு பதில் அமைச்சராகவும், இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, நிதி பதில் அமைச்சராகவும், இராஜாங்க ☞ 2

## தேர்தல் திருத்த சட்ட வரைவு குறித்து கட்சிகளுடன் பேச்சு

### விரைவில் நடக்கும் என்கிறார் அமைச்சர்

தேர்தல் சீர்திருத்தச் சட்டம் தொடர்பில் கட்சித் தலைவர்களுடன் பேசித் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்று நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் கடந்த வாரம் அமைச்சரவையில் முன்வைத்த தேர்தல் சீர்திருத்தச் சட்ட வரைவு பரவலானகண்டனங்களுக்கு உள்ளாகியுள்ளது. தேர்தல்களைப் பிற்போடுவதற்கான சதி முயற்சியாகவே இந்தச் சட்ட வரைவு கொண்டு வரப்படுகின்றது என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டியிருந்தார்.

இந்த நிலையில், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்கும் தேர்தல் முறைமை திருத்தம்குறித்துக்கருத்து வெளியிட்ட அமைச்சர் விஜயதாச ராஜபக்ஸ, இது எனது நோக்கமல்ல. ஆட்சியாளர்களதும்நாட்டு மக்களினதும் ☞ 2

## 45 நாட்களுக்குள் பெறுபேறு

நடந்துமுடிந்த தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப்பெறுபேறுகள் 45 நாட்களுக்குள் வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைகள்ஆணையாளர் நாயகம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார். 2023ஆம் ஆண்டுக்கான 5ஆம் ஆண்டுபுலமைப்பரிசில் பரீட்சை நேற்று நடைபெற்றது.

நாடு முழுவதும் 2,888 பரீட்சை நிலையங்களில் 337,956 பரீட்சார்த்திகள் பரீட்சை எழுதினார்எனபரீட்சைகள் திணைக்களம் தெரிவித்தது.

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

பின்னர் கைவிடப்பட்டிருந்த அந்தப் பணி சனிக்கிழமை கோப்பாயில் மீண்டும் தொடங்கியிருக்கிறது.

இஸ்ரேல்பாலஸ்தீனப்போரைப் பற்றித் தொடங்கிவிட்டு, திடீரென இவன் என்ன தமிழ் அரசுக் கட்சி பற்றிப் பேசுகின்றான் என்று நீங்கள் நினைப்பீர்கள் என்பது எனக்குத் தெரியும். பொறுமையாக வாசியுங்கள் அது ஏன் என்பது புரியும்.

தமிழ் அரசுக் கட்சியின் பொதுக் குழுக் கூட்டத்தைக் கூட்டினால் கட்சியின்தலைமைப்பதவிபறிபோய் விடுமோ என்ற அச்சம் தலைவர் மாவைசேனாதிராசாவுக்குஇருப்பதே கூட்டம் கூட்டப்படாததற்குக் காரணம் என்று கட்சிக்குள் பெரும்பாலானவர்கள் நம்புகின்றார்கள். அதில் உண்மையும் இருக்கக்கூடும். ஏனெனில் 2019 நாடாளுமன்றத் தேர்தலில் மாவை வெற்றிபெறத் தவறியதிலிருந்தே அவரது தலைமை கட்சிக்குள் தேவையற்ற ஒன்றாக மாறிவிட்டது.

அண்மைக் காலமாக கட்சித் தலைமையைக் கைப்பற்றும் போட்டியில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரனும் சிறீதரனும்ஈடுபாடுகாட்டுகின்றார்கள் என்பது வெளிப்படையானது. அதிலும்தலைவர்பதவிக்குப்போட்டி ஏற்பட்டால்அதுவும்கூடஜனநாயகப் பண்புதான் என்பது சுமந்திரனின் வாதம். அப்படிப் போட்டி ஏற்படுவது ஒன்றும் மோசமான காரியமல்ல என்று அவர் நினைக்கிறார்கள். போட்டியின்றிஏகமனதானதெரிவாக இருந்தால் நன்றாக இருக்கும் என்பது சிறீதரனின் கருத்து.

இதற்கிடையில் அப்படிப்பட்ட போட்டி வராமல் இருப்பதற்காகத் தானே தலைமையில் தொடர்வதுதான் தீர்வு என்றவாறு தலைவர் மாவை கட்சிக்காரர்கள் சிலருடன் பேசியிருக்கிறார். ஆனால், அவர் தலைமையில் தொடர்வதற்கான ஆதரவாளர்கள் பெரியளவில் கட்சிக்குள் இல்லை என்பது தெளிவு. நீண்ட நாள்களாக அவரை அந்த இடத்தில் வைத்துப் பாதுகாத்துவந்தவர்களானகட்சியின் ஏனைய முக்கிய பதவிகளில் உள்ள மூத்தவர்களும் கட்சிக்குள் பலமிழந்து வரும் நிலையில் - அவர்களின் பிடி தளர்ந்து வரும் நிலையில்-பொதுக்கூட்டம்நடந்தால் தலைமை கைமீறும் என்பது மாவையருக்கு நன்கு தெரியும். அதனாலேயே கூட்டத்தைக் கூட்டாமல்இழுத்தடித்துக்கொண்டே போகிறார்என்பதுகட்சிக்காரர்களின் நம்பிக்கை.

இந்த நிலையில்தான் பொதுக் கூட்டத்தை கூட்டாமல் இருப்பதற்கு மாவையர்புதியயோசனைஒன்றை பிடித்திருக்கிறார். அது மிகவும் சுவாரஸியமானது. அண்மையில் முக்கிய அரசியல் பிரமுகர் ஒருவர் மாவையரிடம் கட்சியின் மாநாடு குறித்துக் கேட்டிருக்கிறார். ''எண்ணண்ணே டிசெம்பரில் பொதுக்கூட்டம் என்கிறார்கள். ஒழுங்குகள் எல்லாம் எப்பிடிப் போகுது?'' என்று கேட்டிருக்கிறார்.

''ஓம் தம்பி! கூட்டத்தை நடத்தத்தான்வேணும். எண்டாலும் இஸ்ரேல் - பாலஸ்தீன போர் கடுமையாகநடக்குதானே, நாங்கள் அதுகளையெல்லாம் பாத்துத்தான் கூட்டத்தைநடத்தவேணும். எல்லாம் பாப்பம்'' என்று ஒரே போடாகப் போட்டிருக்கிறார் மாவையர்.

கேட்டுக்கொண்டிருந்த அந்தப் பிரமுகர் விக்கித்துப் போனார். இஸ்ரேல் போர் எதெதற்கெல்லாம் காரணமாகியிருக்கிறது என்பதை அறிந்ததுதான் அவரது அதிர்ச்சிக்குக்காரணம்.

இப்போது புரிகிறதா நான் தொடக்கத்திலேயே இஸ்ரேல் - பாலஸ்தீன போரின் தாக்கம் எதுவரைக்கும் பாயும் என்று தெரிகிறதா என்கிற கேள்வியைக் கேட்டதன் அர்த்தம்?

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## நீதிமன்றம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறினோம்.

பண்ணையாளர்கள் பொது மக்கள் சேர்ந்து மயிலத்தமடு மாதவனைமேச்சல்தரைஅபகரிப்பை நிறுத்துமாறு கோரி 31 நாட்களாக தொடர்ச்சியான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர்.

இந்தநிலையில், பல அழுத்தங்களுக்கு பிற்பாடே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்தக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார்.

அங்கு,மயிலத்தமடுமாதவனைப் பகுதியில் சட்டவிரோதமாக குடியேறி விவசாயம் செய்வோரை அகற்றி அந்த இடத்தை மேய்ச்சல் தரையாகத் தொடர்ந்தும் வைத்திருக்கவேண்டும் என்பதே கால்நடைப் பண்ணையாளர்களின் கோரிக்கை என்பதை அழுத்தமாகத் தெரிவித்தோம்.

நாங்கள் கேட்பதைப்போன்று பொலிஸார் அங்கு சென்று அந்த மக்களைத்திடீரெனஅகற்றமுடியாது என்று ஜனாதிபதி பதிலளித்தார். ஆக்கிரமித்திருப்பவர்களை அகற்ற வேண்டுமென்றால், பொது சொத்து அபகரிப்பு சட்டத்தின் கீழ் பொலிஸார் நீதிமன்றில்வழக்குத்தாக்கல்செய்து நீதிவானின் உத்தரவைப் பெற்ற பின்னரே அந்த நடவடிக்கையை எடுக்க முடியும் என்று கூறிய ஜனாதிபதி அதனைச் செய்யும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதைச் செய்வதற்கு எத்தனை நாட்கள் எடுக்கும் என நான் கேட்டபோது, ஓரிரு நாட்களில் செய்து முடிக்கலாம் என ஜனாதிபதி உறுதியளித்தார் என தெரிவித்தார்.

மேலும் இக் கூட்டத்தில் தமிழ் மொழிபெயர்ப்பு வழங்கப்படாத காரணத்தால்அதில்கலந்துகொண்ட தமிழர்கள் பல இடர்பாடுகளை எதிர்கொண்டனர் என்றும் அவர்கள் தமது கருத்துக்களை முன்வைக்க முடியாத நிலை ஏற்பட்டது என்றும் அதேபோன்ற அங்கு என்ன கலந்துரையாடப்படுகின்றது என்பதைத் தெரிந்துகொள்ள முடியாமல்அந்தரப்பட்டனர் என்றும் தெரிவித்தார்.

## பேருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபைக்கு சொந்தமான பேருந்து மீது சனிக்கிழமை மாலை 5.30 மணியளவில் கல் வீச்சு தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

புதுக்குடியிருப்பு, மந்துவில் பகுதியில் மோட்டார் சைக்கிலில் வந்த மூவர் இந்தத் தாக்குதலை மேற்கொண்டனர். பின்னர் மோட்டார்சைக்கிளைக் கைவிட்டுத் தப்பி சென்றுள்ளனர்.

இச் சம்பவத்தில் பேருந்தின் முன்பகுதியில் சிறிது சேதம் ஏற்பட்டது.

சம்பவத்தைத் தொடர்ந்து பேருந்து அந்த இடத்திலேயே நிறுத்தப்பட்டுபயணிகளுக்குமாற்றுப் பேருந்துவசதிசெய்துகொடுக்கப்பட்ட பின்னர்பேருந்தும்மோட்டார்சைக்கிளும் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மயிலத்தமடுவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகளுக்கு இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார் என்றும் தெரிவிக் கப்பட்டது. .

இந்த கலந்துரை யாடலில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான்,

ஜனாதிபதியின் செயலாளர்,ஆளுங்கட்சி அமைச்சர்கள், நாடாளுமன்றஉறுப்பினர்கள், மாவட்டச் செயலர், மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம், பொலிஸ்மா அதிபர் மற்றும் வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, விவசாயம் மற்றும் கால்நடைவளர்ப்பு என்பன இந்த நாட்டின் முதுகெலும்பாகும். இவை இரண்டும்பாதுகாக்கப்படவேண்டும்.

வெளிமாவட்டங்களில் இருந்து வந்து மட்டக்களப்பு மயிலதமடுவில் விவசாயம் மேற்கொள்பவர்களுக்கு அவர்களின் சொந்த மாவட்டங்களிலேயே விவசாயத்துக்கான இடங்களை வழங்குங்கள்..

இவ்வாறு மாற்று இடங்களை வழங்குவதன் ஊடாக பண்ணையாளர்கள், விவசாயிகள் என இருத்தரபினருடைய பிரச்சினைகளும் முடிவுக்கு வரும்..

இந்தப் பிரச்சினை ஒரு முடிவுக்கு வரும் வரையில் கால்நடைப் பண்ணையாளர்களின் கால்நடைகளுக்குத் தேவையான உணவுக்கு அரச உதவிகளை வழங்குங்கள் - என்று தெரிவித்தார் எனக் கூறப்பட்டது.

இதேவேளை, மயிலத்தமடு கால்நடைப்பண்ணையாளர்களின் போராட்டம் நேற்று 31ஆவது நாளாகவும் தொடர்ந்தது. தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேற்று போராட்ட இடத்திற்குச் சென்று பண்யயாளர்களுடன் கலந்துரையாடியதுடன் அவர்களின் கோரிக்கைகள் குறித்தும் கேட்டறிந்தார்.

தமக்கு நிரந்தர தீர்வு ஒன்று கிட்டும் வரை தமது போராட்டம் தொடரும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

## இந்தியப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எம்மத்தியில் இருக்கிறார்கள். பாரிய இனவழிப்பினை தமிழினம் சந்தித்ததனை நீங்கள் அறிவீர்கள். இவ்வினவழிப்பில் கொல்லப்பட்ட மக்களினை நினைவேந்தல் செய்வதன் முக்கியத்துவத்தையும் நீங்கள்உணர்வீர்கள். இந்நிலையில், தங்களால் யாழ்ப்பாணத்தில் இசை நிகழ்ச்சி நடத்துவதாக தீர்மானிக்கப்பட்டுள்ள ஒக்டோபர் 21 மற்றும் 22 ஆம் திகதிகளாகிய இதே தினங்களில், 1987 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பயாற்றிக்கொண்டிருந்த வைத்தியர்கள், தாதியர்கள், உட்பட நோயாளர்கள், பொதுமக்கள் இந்திய அமைதிப்படையினரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டிருந்தனர் என்பதனை நீங்கள் அறிந்திருக்கக்கூடும். அநியாயமான முறையில் படுகொலை செய்யப்பட்ட அப்பாவித் தமிழ் உறவுகளை வருடா வருடம் நினைவுகூரப்பட்டு வருகிறது. இந்த துயர்மிகுந்த நாட்களில், நினைவேந்தல்களூடாக அடுத்த சந்ததியினருக்கு தமிழின போராட்டத்தின் நியாயங்கள் சென்றடையும் என நாம் நம்புகிறோம். இதனை மடைமாற்றி இந்நாட்களை இளைஞர்களுக்கான மகிழ்ச்சிகரமான களியாட்ட நாட்களாக மாற்றியமைக்க முயலும் இலங்கை இந்திய அரசுகள், தங்களை பலிக்கடாவாக்கமுயல்கிறார்கள். இந்நினைவேந்தல் நாட்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமேற்படிஇசைநிகழ்ச்சிகளில் தாங்கள் தெரிந்தோ தெரியாமலோ கலந்துகொள்வதானது, அநியாயமாக படுகொலை செய்யப்பட்ட அப்பாவித் தமிழ் உறவுகளை அவமதிக்கும் செயற்பாடு என்பதுடன், பேரினவாதத்தால் இன்றும் நடைபெற்று வரும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்புக்கு துணைநிற்கும் செயற்பாடாகவும் அமைந்துவிடும். மேற்படி நினைவேந்தல்களூடாகதமிழினம் அடுத்த சந்ததிக்கு கடத்த முயலும் தமிழின விடுதலை வேட்கைக்கும் எதிரானசெயற்பாடாகவும்அமையும். தாங்கள் தமிழ்நாட்டிலிருந்து வருகைதந்திருப்பவர் என்னும் வகையில், இந்திய படையினரால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளின் நினைவு தினங்களில் தங்களின் இசை நிகழ்ச்சி நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டிருப்பது, இன்றும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்புக்கு உள்ளாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ் மக்களால் தவறாகவே என்பதனை அன்புரிமையுடன் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். பார்க்கப்படும் இறந்தவர்களை நினைவேந்தும் உரிமையை சர்வதேச சட்டங்களும் இலங்கைச் சட்டங்களும் அனுமதித்துள்ள போதும், படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களின் நினைவேந்தல்களுக்கு சட்டவிரோதமாக தடைகளை ஏற்படுத்தும் முயற்சியில்தொடர்ந்துஈடுபட்டுவரும் தரப்புக்கள், நினைவேந்தல்களுக்கு சட்டரீதியாக தடைகளை ஏற்படுத்த முடியாதபோது, இந்நாட்களைத் தெரிவுசெய்துகளியாட்டதினங்களாக மாற்றும்முயற்சிகளைமேற்கொண்டு வருகின்றனர். இத்தகைய முயற்சிகளை புரிந்துகொள்ள வேண்டும் என்று தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

# நவராத்திரி சிறப்பம்சம்



### அன்னையே துர்க்கையே அரவணைப்பாய் தாயே !

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண் .... ஆஸ்திரேலியா

இன்பகலா வாழ்க்கை எனக்கருள வேண்டும்
ஈரமொடு வீரம் மனமமர வேண்டும்
துன்பது என்னைத் தொற்றாம லிருக்கத்
துணையாக இருப்பாய் துர்கையம்மா நீயும்

வாதமிடு குணத்தை வதைத்திடுவாய் அம்மா
மோதவரும் பகையை விலக்கிடுவாய் அம்மா
சோதனைகள் அனைத்தும் சாதனையாய் ஆக்க
துணையாக இருப்பாய் துர்க்கையம்மா நீயும்

வார்த்தையிலே இனிமை சேர்த்திடுவாய் தாயே
வம்பர்தமை வாழ்வில் அகற்றிவிடுவாய் அம்மா
காப்பாக இருப்பாய் கண்டிப்பாய் இருப்பாய்
கண்ணுக்குள் மணியாக இருக்கின்றாய் நீயும்

வாழ்வாக இருப்பாய் வளமாக இருப்பாய்
தாழ்வாக இருப்பாரைத் தாங்கியே நிற்பாய்
ஆழுமாய் இருக்கும் அருட்கடலும் ஆவாய்
அன்னையே துர்க்கையே அரவணைப்பாய் தாயே

உலகத் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் இரசிகத்தளத்தைக் கொண்டிருக்கும் தாங்கள், தமிழ்மக்களின் வலிகளையும், வேதனைகளையும் உணர்ந்துகொண்டு இழப்புக்களுக்கும், தியாகங்களுக்கும் மதிப்பளித்து குறித்த திகதிகளை மாத்தி பொருத்தமான வேறொரு திகதியில் தங்கள் நிகழ்வை மாற்றியமைக்குமாறு வேண்டிக் கொள்கிறோம் என்றுள்ளது. ள

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் கனக ஹேரத், தொழில்நுட்ப மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு பதில் அமைச்சராகவும், இராஜாங்க அமைச்சர் அனுப பெஸ்குவல் பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல்பதில் அமைச்சராகவும், வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி சுற்றாடல் பதில் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## வாரத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடையிலான பயணிகள் கப்பல் சேவை 41வருடங்களுக்குப்பின்னர் வெள்ளிக்கிழமை கோலாகலமாகத் தொடக்கி வைக்கப்பட்டது. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியால் நிகழ்நிலை மூலம் தொடக்கி வைக்கப்பட்ட இந்தக் கப்பல் சேவையில் முதல் நாளில் 59 பேர் தமிழ்நாட்டில்இருந்துயாழ்ப்பாணம் வந்தனர.

இந்த நிலையில் கப்பலில் தினமும் பயணிப்பதற்குப் போதிய பயணிகள் இல்லாத காரணத்தால் 7 நாள் கப்பல் சேவையை வாரத்தில் 3 தினங்களிற்கு மட்டுப்படுத்துவது என்று கப்பல் நிறுவனம் தீர்மானித்துள்ளது. குறிப்பாக நேற்று ஞாயிற்றுக் கிழமை பயணத்துக்கு மிகச் சொற்பப் பயணிகளே முன்பதிவு செய்திருந்தனர். இதனால் அந்தப் பயணம் ரத்துச் செய்யப்பட்டது.

இதையடுத்து இனிமேல் வாரத்தின் திங்கள், புதன், வெள்ளி ஆகிய 3 தினங்களில் மட்டுமே பயணிகள் கப்பல் சேவை இடம்பெறும் என தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் தற்போது கொழும்பில் பருவகால விமானச் சிட்டை இருவழிக் கட்டணமாக 34 ஆயிரம்ரூபாவிற்கும்யாழ்ப்பாணம் சென்னை விமானச் சிட்டை 56 ஆயிரம் ரூபாவுள்ள அதேநேரம் கப்பல் பயணத்திற்கு 53 ஆயிரத்து 500 ரூபா அறவிடப்படுவதும் இந்தச் சேவைக்குப் பயணிகள் வரத் தயங்குவதற்கான காரணம் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

## தேர்தல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்பார்ப்பாகுமெனத் தெரிவித்தார்.

புதியசட்டவரைவின்உள்ளடக்கம் குறித்து கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர், 160 உறுப்பினர்களைத் தொகுதிவாரி முறையிலும் எஞ்சிய 65 உறுப்பினர்களை விகிதாசார முறையிலும் தெரிவு செய்வதற்கான தேர்தல் திருத்தமே முன்மொழியப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் ஆராய பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையிலான நாடாளுமன்றக் குழு ஒற்றை அமைக்கும் யோசனையும் முன்வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இந்தச் சட்ட வரைவு தொடர்பில் எதிர்காலத்தில் கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடி அவர்களது யோசனைகளும் உள்வாங்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## கனமழை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டியாக வெளக்கா டாகியது. பண்டாரவளை விகாரைக்கு முன்பாக கொழும்பு - பதுளை பிரதான வீதியும் தடைப்பட்டது. வீதியில் சுமார் நான்கு அடிக்கு மேல் வெள்ள நீர் நிரம்பியது.

இதனால் புலமைப் பரிசில் பரீட்சை முடிந்து வீடுகளுக்கு செல்ல வந்த மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் உள்ளிட்ட பொது மக்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகினர்.

எனினும் சில மணிநேரங்களில் வெள்ளம் வடிந்து நிலமை இயல்புக்குத் திரும்பியது.

# நவம்பர் 25 இன் பின்னரே சீனக் கப்பலுக்கு அனுமதி

## வெளிவிவகார அமைச்சு தகவல்

இலங்கைக்கானவிஜயத்தை மேற்கொள்வதற்கு சீனாவின் ஆய்வுக்கப்பலான ஷியான்-06 அனுமதி கோரியிருந்த நிலையில் எதிர்வரும் நவம்பர் மாதம் 25 ஆம் திகதிக்கு பின்னராக உள்நாட்டுக்கு வருகை தருவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.



சீன ஆய்வுக்கப்பலான ஷியான்-06 இலங்கைக்கான விஜயத்தை இம்மாதம் 25 ஆம் திகதி மேற்கொள்ளவுள்ளதாக அறிக்கப்பட்ட நிலையில் அதற்கான அனுமதிவழங்கப்படவில்லை என்று வெளிவிவகார அமைச்சு தொடர்ச்சியாக கூறி வந்தது. எனினும், பாதுகாப்பு அமைச்சு குறித்த கப்பலின் பிரவேசத்துக்கான அனுமதி அளிக்கப்பட்டதாக ஆரம்பத்தில் கூறியிருந்தபோதும் பின்னர் அதனை இறுதி செய்கின்ற பணி வெளிவிவகார அமைச்சினுடையது என்று கூறியது.

இதேநேரம், அக்கப்பலில் இணைந்து ஆய்வுகளை மேற்கொள்வதற்கு திட்டமிட்ட ருஹூணு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள் அதிலிருந்து விலகுவதாக அறிவித்திருந்தனர். எனினும் நாரா நிறுவனம் எவ்விதமான அறிவிப்புக்களையும் செய்யவில்லை.

மறுபக்கத்தில் சீன விஞ்ஞான கற்கைகள் நிறுவனம் மற்றும் தென்சீனகடல் சமுத்திரவியல் கற்கைநிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் ரோலும் லீ விசேட பிரமுகர்களுக்கு அனுப்பி வைத்துள்ள அழைப்பிதலில் இலங்கைக்கு ஒக்ரோபர் 25ஆம் திகதி விஜயம் செய்யவுள்ள ஷியான்-06 ஆய்வுக்கப்பலின் வரவேற்பு மற்றும் விஜய நிகழ்வில் பங்கேற்பதற்கான உறுதிப்படுதல்களை கடந்த 12ஆம் திகதிக்கு முன்னதாக மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில், இலங்கையின்வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி கருத்து வெளியிடுகையில் -

சீனாவின் ஆய்வுக்கப்பலான ஷியான் - 6 இலங்கைக்கு பிரவேசம் செய்வதற்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 25ஆம் திகதிக்கு பின்னர் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எமது இந்தத் தீர்மானம் சீனாவுக்கு உத்தியோக பூர்வமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், ஒக்ரோபர் மாதத்தில் நிகழ்ச்சி நிரலிடப்பட்ட பிற பணிகள் இருப்பதன் காரணமாகவே குறித்த கப்பலின் பிரவேசத்தை பிற்போடுமாறு நாம் சீனாவைக் கோரியுள்ளோம். - என்றார்.

எவ்வாறாயினும், சீனாவின் தரப்பில் இந்த அறிவிப்பு தொடர்பில் எவ்விதமான பிரதிபலிப்புக்களும் செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# பொருளாதார மற்றும் கடன்மறுசீரமைப்பு நிலைவரத்தில் இலங்கை முன்னேற்றம்

## ஜி—24 செயலக பணிப்பாளர் கலாநிதி அயபோ மாஷா தெரிவிப்பு

இலங்கையின் பொருளாதார நிலைவரம்சற்றுமுன்னேற்றமடைந்து-வருவதாகவும், பொதுச்செயன்முறையின்கீழ்கடன்மறுசீரமைப்புஓரளவு மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும்ஜி-24 செயலகத்தின் பணிப்பாளர் கலாநிதி அயபோ மாஷா தெரிவித்துள்ளார்.



அதுமாத்திரமன்றி மொரோக்கோவின் மரகேச்சில் நடை பெறும் உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் வருடாந்தக் கூட்டத்தின்போது இலங்கை தொடர்பில் ஏதேனும் முன்னேற்றம் அடையப்படும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

'இலங்கை ஓரளவுக்கு முன்னேற்றமடைந்து வருவதுபோல் தெரிகிறது. குறிப்பாக பொதுச்செயற்திட்டத்தின்கீழ் கடன்மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன், அதன் அடுத்தகட்டப் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனவே மரகேச்சில் நடைபெறும் உலகவங்கி மற்றும் சர்வதேசநாணய நிதியத்தின் வருடாந்தக் கூட்டத்தின்போது இவ்விடயத்தில் ஏதேனும் முன்னேற்றம் எட்டப்படுமென எதிர்பார்க்கிறேன்' என்று அயபோ மாஷா தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க இலங்கை, சாம்பியா, கானா போன்ற நாடுகள் கடன்மறுசீரமைப்புசெயன்முறையில் குறிப்பிடத்தக்களவுமுன்னேற்றத்தைக் காண்பித்திருப்பதாக கடன்வழங்குநர் மற்றும் கடன்பெறுநர் நாடுகள் சுட்டிக்காட்டியுள்ளன.

இருப்பினும் இலங்கையைப் பொறுத்தமட்டில் மிகக்கடினமானதும், அவசியமானதுமான மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம்அடையப்பட்டிருப்பினும், கடன்மறுசீரமைப்பு செயன்முறையில் எதிர்பார்க்கப்பட்ட அடைவு தென்படவில்லை என முதலாம் கட்ட மதிப்பீட்டுப்பணிகளுக்காக இலங்கைக்கு வருகைதந்திருந்த சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)



# அமைச்சருக்கு தெரியாமலா புதிய திருத்தம் மீனவர்களை சாகடிப்பதற்கே புதிய சட்டம்

## வர்ணகுலசிங்கம் காட்டம்

மீனவர்களுக்கு பாதிப்பு ஏற்படும் விடயங்களை மேற்கொள்ள மாட்டேன் என கூறிவரும் கடற்தொழில் அமைச்சருக்குத் தெரியாமல், மீனவர்களை சாகடிக்கும் புதிய சட்டதிருத்த மூலக் கலந்துரையாடல் இடம்பெற்றதா என தொண்டைமானாறு கடற்தொழிலாளர் சங்கப் பிரதிநிதி நா. வர்ணகுலசிங்கம் கேள்வி எழுப்பினார்.

பாசையூர்கடற்தொழிலாளர் சங்க கட்டடத்தில் இடம்பெற்ற மீனவ அமைப்புகளுடனான கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

1996ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட கடற்தொழில் சட்டம் 16 சட்ட விரோத தொழில்களைத் தடை செய்யும் சட்டமாக பயன்பாட்டில் உள்ளது.

குறித்த சட்டத்தைத் திருத் துவதற்கான புதிய முன்மொழிவுகளை உள்ளடக்கிய வரைவுடன் கொழும்பிலிருந்து உயர்அதிகாரிகள்கொண்டகுழு அண்மையில் யாழ்ப்பாணம் வருகை தந்தது.

சுமார் 360 பக்கங்களைக் கொண்ட வரைவில் 60 பக்கங்கள் மட்டும் தமிழில் பகிரப்பட்ட நிலையில், எஞ்சிய பக்கங்கள்தமிழ்மொழிபெயர்ப்பு மீனவ சமூகங்களுக்கு வழங்கப்படவில்லை.

இந்திய மீனவர்களை ஒரு நொடியும் இலங்கை கடல் எல்லைக்குள் தொழில் செய்ய அனுமதிக்க மாட்டேன் என அமைச்சர் கூறுகிறார். ஆனால், புதிய சட்ட திருத்தத்தில் கடற்தொழில் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் நீக்கப்பட்டு துறை சார் அமைச்சருக்கும் கடற்தொழில்திணைக்களப் பணிப்பாளருக்கும் அதிகாரம் வழங்கப்படுகிறது.

அவர்கள் நினைத்தால் கடலில் இந்திய மீனவர்களை அனுமதிப்பது, கடல் எல்லைகளைக் குறைப்பது, தொழில் செய்ய மீனவர்களின் எண்ணிக்கையை குறைப்பது, அதிகரிப்பது என அனைத்து அதிகாரங்களும் அவர்களுக்குவழங்கப்படுகிறது.

நான் அமைச்சரிடம் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன்... உங்களுக்குதெரியாமலா கொழும்பிலிருந்து அதிகாரிகள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து குறித்த திருத்த சட்டமூலம் தொடர்பில் கலந்துரையாடல் நடத்தினார்கள்.

அத்துமீறிய இந்திய கடற்தொழிலாளர்களால் வடபகுதி மீனவர்கள் தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்டுவரும்நிலையில், இதுவரை அமைச்சரால் தீர்வு ஏதும் முன்வைக்க முடியவில்லை.

இவ்வாறான நிலையில் எமதுமீனவமக்களைமீண்டும் சாகடிப்பதற்காக புதிய சட்ட திருத்தத்தை மேற்கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அமைச்சர் சட்ட விரோத சுருக்கு வலைத் தொழிலை கட்டுப்படுத்துகிறேன் என பல தடவைகள் கூறியும் கட்டுப்படுத்த முடியவில்லை.

வடமராட்சி கிழக்கு பகுதியில் தொடர்ச்சியாக சட்ட விரோத சுருக்குவலைதொழில் இடம்பெற்று வரும் நிலையில், வெளி மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர் சுமார் 50 இற்கும் மேற்பட்ட படகுகளை பயன்படுத்தி சட்ட விரோதமாக தொழில் செய்து வருகிறார்.

குறித்த நபரின் செயற்பாடுகள் தொடர்பில் துறை சார்ந்த அதிகாரிகளுக்கு தெரிந்த நிலையிலும் நடவடிக்கை எடுக்காததன் பின்னணி என்ன?

ஆகவே, தற்போது புதிய சட்ட திருத்தம் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுவரும் நிலையில், மீனவசங்கங்களின் விருப்பங்கள் இல்லாமல் குறித்த திருத்தத்தை மேற்கொள்ளக் கூடாது. - என்றார். (05)



# பொலிஸ் நிலையத்தில் பெண் தீக்குளிப்பு

## ஹப்புத்தளையில் சம்பவம்

ஹப்புத்தளை பிரதேச பொலிஸ் நிலையத்தில் பெண்ணொருவர் உடலில் ஒரு வகை திரவத்தை ஊற்றி தீக்குளித்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பொலிஸ் நிலையத்தின் கழிவறையில் தீக்குளித்துள்ளார் எனபொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம்தொடர்பாகபொலிஸாரால்விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

காயமடைந்த பெண் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (05)

# கைதான கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்ற பதிவாளருக்கு விளக்கமறியல்

போலி ஆவணங்கள் தயாரித்த குற்றத்திற்காக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட கொழும்பு கோட்டைநீதிவான் நீதிமன்ற பதிவாளரை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சனிக்கிழமை நீதிமன்றம் உத்தரவிட்டது.

கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்ற பதிவாளர் வெள்ளிக்கிழமை குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

போலி ஆவணங்களை தயாரித்தமை மற்றும் பல குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பதிவாளர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# இஸ்ரேலுக்குள் நுழைய முயன்ற இரண்டு இலங்கையர்கள் கைது

*இலங்கையர்கள் என நம்பப்படும் இரண்டு பெண்கள், ஜோர்தானில் இருந்து சட்டவிரோதமான முறையில் இஸ்ரேலுக்குள் செல்ல முயன்ற போது, இஸ்ரேலிய பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*இதனைஇஸ்ரேலுக்கானஇலங்கைதூதுவர் நிமல் பண்டார உறுதிப்படுத்தியுள்ளார்.*

*(05)*

# மீனவர்களின் பிரச்சினைகளை அரசியலாக்காது தீர்வு காண்க

## அன்னராசா வேண்டுகோள்

எமது பிரச்சினைகளை அரசியலாக்காமல், தீர்வு காண வேண்டும்என ஊர்காவற்துறை கடற்தொழிலாளர் சமாசத்தின் செயலாளர் அ. அன்னராசா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழக கடற்தொழிலாளர்களுக்கு இலங்கை கடற்பரப்பில் அனுமதி கொடுப்பது தொடர்பாக அரசாங்கம் பரிசீலிப்பதாக இலங்கை பிரதமர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இலங்கை கடற்தொழில் அமைச்சர், தமிழககடற்தொழிலாளர்களின் படகை ஒரு நொடி கூட அனுமதிக்க முடியாது எனத் தெரிவித்துள்ளார்.




இரு நாட்டு கடற் தொழிலாளர்கள் பிரச்சினைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் உண்மையான நிலைப்பாடு என்ன என்பது தொடர்பில் எமக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

கடற்தொழிலாளர்கள் பிரச்சினையை இரு நாட்டு அரசாங்கங்களும் பேசித் தீர்த்து வைக்க வேண்டும். அதை விடுத்து அரசாங்கத்தில் உள்ளவர்கள் ஆளுக்கு ஒரு விடயத்தை சொன்னால் நாம் எதனை நம்புவது?

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி ஒரு தீர்க்கமான முடிவை எடுத்து அறிவிக்கவேண்டும். பிரதமரின் கருத்தா? கடற்தொழில் அமைச்சின் கருத்தா இறுதியானதும் தீர்க்கமானது என்பதை எமக்கு அறியத்தர வேண்டும். - என்றார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அரசியலும் நீதியும்

**மயிலத்தமடு மாதவனை மேயச்சல் தரைப் பிரச்சினையில், அங்கு அத்துமீறிக் குடியேறி இருப்பவர்களை அங்கிருந்து அகற்றுவதற்கு சட்டத்தின் உதவியை நாடும்படி அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார் என்று செய்திகள் வந்திருக்கின்றன. அந்தக் கூ–ட்டத்தில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இதனைத் தெரிவித்திருக்கிறார்.**

**”பண்ணையாளர்கள் பொதுமக்கள் சேர்ந்து மயிலத்தமடு மாதவனை மேச்சல்தரை அபகரிப்பை நிறுத்துமாறு கோரி 31 நாட்களாக தொடர்ச்சியான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர்.**

**இந்தநிலையில், பல அழுத்தங்களுக்கு பிற்பாடே அரசுத் தலைவர் ரணில் விக்ரமசிங்க இந்தக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார்.**

**அங்கு, மயிலத்தமடு மாதவனைப் பகுதியில் சட்டவிரோதமாக குடியேறி விவசாயம் செய்வோரை அகற்றி அந்த இடத்தை மேய்ச்சல் தரையாகத் தொடர்ந்தும் வைத்திருக்கவேண்டும் என்பதே கால்நடைப் பண்ணையாளர்களின் கோரிக்கை என்பதை அழுத்தமாகத் தெரிவித்தோம்.**

**நாங்கள் கேட்பதைப்போன்று காவல்துறையினர் அங்கு சென்று அந்த மக்களைத் திடீரென அகற்ற முடியாது என்று அரசுத் தலைவர் பதிலளித்தார். ஆக்கிரமித்திருப்பவர்களைஅகற்றவேண்டுமென்றால், பொது சொத்து அபகரிப்பு சட்டத்தின் கீழ் பொலிஸார் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து நீதிவானின் உத்தரவைப் பெற்ற பின்னரே அந்த நடவடிக்கையை எடுக்க முடியும் என்று கூறிய அரசுத் தலைவர் அதனைச்செய்யும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.**

**இதைச் செய்வதற்கு எத்தனை நாட்கள் எடுக்கும் என நான் கேட்டபோது, ஓரிரு நாட்களில் செய்து முடிக்கலாம் என அரசுத் தலைவர் உறுதியளித்தார்” என்றும் சாணக்கியன் தெரிவித்திருக்கிறார்.**

**இதனடிப்படையில பார்த்தால், சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டியவர்களாக இருக்கும் காவல்துறையினரேஅதனைஇதுவரையும்செய்யாமல் இருந்திருக்கிறார்கள் என்று அர்த்தப்படுகின்றது. இதுவொரு வெறும் சட்டம் ஒழுங்குப் பிரச்சினை என்றால், அதனை ஏன் இவ்வளவு காலமும் இலகுவாகத் தீர்க்காமல் இழுத்தடித்தார்கள் என்கிற கேள்வியும் எழுகின்றது? அப்படி சட்டம் ஒழுங்கை நடைமுறைப்படுத்தாமல் இதனை ஒரு இனப்பிரச்சினையளவிற்கு வளரவிட்ட காவல்துறை அதிகாரிகளுக்கு எதிராக யார் நடவடிக்கை எடுப்பது என்கிற கேள்வியும் எழுகிறது.**

**நீதிமன்றம் ஊடாக சட்டம்ஒழுங்குப்பிரச்சினையாக இதனை அணுக முடியுமாயின் அரசுத் தலைவர் அனைத்துத் தரப்பினரையும் திரட்டி ஒரு கூட்டத்தை ஏன் கொழும்பில் கூட்ட வேண்டியிருந்தது என்கிற கேள்வியும் எழுகிறது.**

**இந்தக் கேள்விகள் எல்லாம் உணர்த்தும் விடயம் இது வெறும் சட்டம் ஒழுங்குப் பிரச்சினை மட்டுமல்ல, நீதிமன்ற உத்தரவுகள் மூலம் மட்டும் கட்டுப்படுத்தி, காவல்துறையினரால்தீர்க்கப்படக்கூடிய விடயம் அல்ல. இதற்குள் பௌத்த பிக்குகள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் முன் காவல்துறையினர் மகுடிக்கு மயங்கிய பாம்பாக நிற்பார்களே தவிர நடவடிக்கை எடுக்க மாட்டார்கள். அப்படிப்பட்ட நிலையில்அரசுத்தலைவர்சொல்வதைப் போன்று இந்தப் பிரச்சினை இந்த வழி முறையின் கீழ் தீர்க்கப்படக்கூடியதல்ல. அதற்கு ஒரு அரசியல் தீர்மானம் எடுக்கப்படவேண்டும். அத்தகைய தீர்மானத்தை எடுக்கும் துணிவை இழந்துவிட்ட அரசுத்தலைவர் தான் தப்பிக்கொள்வதற்காக இதனை ஒரு சட்டம் ஒழுங்குப் பிரச்சினை என்கிற அளவிற்குத் தரமிறக்கப் பார்க்கிறார் என்பதே உண்மை.**

அகண்ட இஸ்ரேல் திட்டத்திற்கான ஆக்கிரமிப்பு: உருக்குலைகிறது பாலஸ்தீனத்தின் தாயக

# இஸ்ரேலின் போர் குற்றம் எதுவரையும் தொடரும்?

ஐங்கரன் விக்கினேஸ்வரா



பாலஸ்தீனர்களை முற்றாக ஒழித்து, வேறுநாடுகளுக்குவிரட்டி, நாடற்றவர்களாக ஆக்குவதுதான் இஸ்ரேலின் தற்போதைய திட்டம். இதைத்தான் பெஞ்சமின் நேதன்யாகு செப்டம்பர் மாத இறுதியில் ஐ.நா. பொதுச்சபையில் பகிரங்கமாக முன்வைத்தார்.

அவர் வெளியிட்ட வரை படத்தில் சிரியா மற்றும் லெபனானின் சில பகுதிகளையும் உள்ளடக்கிய பகுதிகளுக்கு ‘அகண்ட இஸ்ரேல்’ (Greater Israel) என்று பெயரும் வைத்துவிட்டார். இவருக்குமுன்பே இந்தாண்டு தொடக்கத்தில் இஸ்ரேல் நிதியமைச்சர் பெசாலல் ஸ்மோட்ரிச், பாலஸ்தீனம், லெபனான், சிரியா ஆகிய மூன்று நாடுகளை யும் அழித்து, ஒரு வரைபடத்தை வெளியிட்டார்.

இவையனைத்தும் உள்ளடக்கியதுதான் நாங்கள் எதிர்நோக்கும் அகண்ட இஸ்ரேல் என்று




அறிவிக்கவும் செய்தார். பாலஸ் தீனத்தின் காஸா பகுதி ஹமாஸ் இயக்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. இதற்கு முன்பு மேற்கு கரை மற்றும் காசா இரண்டுக்குமான தலைமையிடமாக மேற்குகரையில் உள்ள ரமல்லாவே இருந்தது.

பாலஸ்தீனவிடுதலைஇயக்கம் (PLO) ஒட்டுமொத்த பாலஸ்தீனமக்களை உணர்வூட்டி, இஸ்ரேலின் அட்டூழியங்களுக்கு எதிராக எண்ணற்ற போராட்டங்களை நடத்தியது. பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர் யாசர் அராபத் தலைமையில் இந்த எழுச்சி நீண்ட காலமாக நீடித்து வந்தது. ஏராளமான பேச்சுக்கள், அமைதி முயற்சிகள் நடந்தன. இஸ்ரேலின் மீறல்கள், பாலஸ்தீன மக்கள் மீதான தாக்குதல்கள், மேலும் மேலும் ஆக்கிரமிப்பு என வரலாறு நெடுகிலும் பாலஸ்தீன விடுதலை இயக்கம் களத்தில் நின்று சவால்களைச் சந்தித்தது.

ஆனால் சுதந்திர பாலஸ்தீனத்துக்கான தீர்வு இன்னமும் கிடைக்கவில்லை. இஸ்ரேலின் கொடிய அடக்குமுறைகள் தீரவில்லை. அதன் கொடூர அடக்குமு-றைகளின் உச்சக்கட்ட விளைவே, கடந்த வார இறுதியில் ஹமாஸ் இயக்கத்தினர் அதிரடியாக இஸ்ரேல் மீது ஏவுகணை தாக்குதல்களை நடத்தியதன் பின்னணி ஆகும்.

**இறுகும் காசா முற்றுகை**

காசாவின் வடக்கே வசிக்கும் அனைவரும் அடுத்த 24 மணி நேரத்தில் தெற்கு காசாவுக்கு இடம்பெயர வேண்டும் என்று இஸ்ரேலிய ராணுவம் அறிவித்தது. 11லட்சம் மக்களை இடம்பெயரச் சொல்வது என்பது, காசா பகுதியின் முழு மக்கள் தொகையில் பாதி. இதில் அடர்த்தியான மக்கள் தொகை கொண்ட காசா நகரமும் அடங்கும்.

பயங்கரமான மனிதாபிமான விளைவுகளை ஏற்படுத்தாமல் இத்தகைய இடப்பெயர்வு நடைபெறுவது சாத்தியமற்றது என ஐ.நா. கூறுகிறது. ஏற்கனவே துயரமான சூழ்நிலையை ஒரு பேரழிவாக மாற்றக்கூடிய சாத்தியத்தைத் தவிர்க்க, இந்த உத்தரவை ரத்து செய்யுமாறு ஐ.நா. கோரிக்கை விடுத்துள்ளது.

**நாங்கள் விலங்குகளுடன் போராடுகிறோம், அதன்படி செயல் படுகிறோம் என்று ஹூப்ரூ மொழியில் அவர் கூறியுள்ளதுடன், காசா மீது முழு முற்றுகையை இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் யோவ் கேலண்ட் அதிகார பூர்வமாக அறிவித்தார். நாங்கள் காசாவை முழுவதுமாக முற்றுகையிடுகிறோம், மின்சாரம் வழங்கப்படாது, உணவு வழங்கப்படாது, தண்ணீர் வழங்கப்படாது, எரிவாயு வழங்கப்படாது, அனைத்தும் மூடப்படும் எனவும் அறிவித்தார்**

**அமைதிக்கான தீர்வு முழு விடுதலையே!**

உலகம் முழுவதும் ஒவ்வொரு நூற்றாண்டிலும் இனப்படுகொலைக்குஆளாகி பேரழிவைச் சந்தித்த யூத இனம், உலகம்தனக்குச்செய்ததை தாம் இன்னொரு இனத்திற்கு செய்திடக் கூடாது என்று ஒரே ஒரு நிமிடம் சிந்தித்திருந்தால், தங்களை அரவணைத்து, ஆதரித்து, அடைக்கலமளித்து அதனால் நிலங்களையும் இழந்த பாலஸ்தீனத்தை, அதன் மக்களை ஒருபோதும் சிதைத்து இவ்வாறு அழித்திருக்காது.

இஸ்ரேலுடன் சமாதான ஒப்பந்தம் செய்துகொண்ட பாலஸ்தீன யாசர் அராபத்திற்கும், பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கும் இஸ்ரேல் அரசு செய்த பச்சைத் துரோகமே ஹமாஸை பாலஸ்தீனி-யர்களின் பெரும்பான்மை ஆதரவுப்பெற்ற விடுதலை இயக்கமாக உருவெடுக்கச் செய்தது. இன்றைக்கு இஸ்ரேல் எதிர்கொள்ளும் அத்தனை தாக்குதல்களும், கடந்த காலங்களில் இஸ்ரேல் செய்த கொடுமைக்கான எதிர் வினைகளே.




எப்பொழுதும் அடிப்பதுதான் வன்முறை, திருப்பி அடிப்பது என்பது ஒருபோதும் வன்முறை ஆகாது. அதுதான் அடிமைத்தளையை அறுத்தெறியும் விடுதலைக்கான பெருவழி ஆகும். பேரழிவை ஏற்படுத்தும் போர் கூடவே கூடாததுதான். உலகம் முழுவதும் அமைதியும், சமாதானமும் வேண்டும்தான். ஆனால் இங்கே உண்மையான அமைதி என்பது முழுமையான பாலஸ்தீன விடுதலையில்தான் இருக்கிறது என்பதை உலக நாடுகள் உணர்வதுதான் அமைதிக்கான நிரந்தரத் தீர்வாக இருக்க முடியும். இஸ்ரேல் மீது பாலஸ்தீனவிடுதலைஅமைப்பான ‘ஹமாஸ்’ நடத்திய தாக்குதல்களும், அதனைத் தொடர்ந்து பாலஸ்தீனத்தின் காசா சிறுநிலத்தின் மீது இஸ்ரேல் ராணுவம் நடத்தி வரும் தாக்குதல்களாலும் இருதரப்பிலுமாக இதுவரை 4000க்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

(5ஆம் பக்கம் பார்க்க..)

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கையில் 2025 ஆம் ஆண்டளவில் 6,110 ஹெக்டேயர் நிலப்பரப்பு அழியும்



கடல் மட்டம் அதிகரிப்பால் 2025 ஆம் ஆண்டளவில் 6,110 ஹெக்டேயர் நிலப்பரப்பையும், 2100 ஆம் ஆண்டளவில் 25,000 ஹெக்டயர் நிலப்பரப்பையும் இலங்கை இழக்கும் என சார்க் உணவு சங்கத்தின் துணைத் தலைவரும் ஹொரண ஆதார வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளருமான பி.ஜி. ஹேமந்த குமார தெரிவித்துள்ளார்.

உலகின் மிக முக்கிய சுற்றுசூழல் பிரச்சினையாக இருக்கும் காலநிலையில் ஏற்பட்டுள்ள பாரிய மாற்றமே இதற்கான காரணம் என அவரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

களுத்துறை, வாதுவ பிரதேசத்தில் 'காலநிலை மாற்றங்கள் சுகாதாரத்தின் மீதான தாக்கம்' எனும் தொனிப்பொருளின் கீழ் இடம்பெற்ற செயலமர்வில் உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் -

ஒரு வருடத்திற்குள் அதிதீவிர வானிலை நிகழ்வுகள் அதிகரிப்பால் ,உலகளாவிய காலநிலை இடர் குறியீட்டில் இலங்கை உலகின் இரண்டாவது இடத்தில் உள்ளது.

இலங்கையில் நாளொன்றுக்கு 200,000 உணவுவகைகளை சுற்றுவதற்காக பயன்படுத்தப்படும் மக்காத பொலித்தீன்களும் 150,000 பொலித்தீன் பைகளும் பயன்படுத்தப்படுகின்றன. சராசரியாக தனிநபரொருவர் மாதம் ஒன்றுக்கு நுகரும் பொலித்தீனின் அளவு 0.5 கிலோவாகும்.

காலநிலை மாற்றம் ஆரோக்கியத்தில் நேரடியாக பாதிப்பை ஏற்படுத்துகின்றது. அதாவது, அதிகரித்த வெப்பநிலை மற்றும் வெப்ப அலைகளின் அதிர்வெண் மற்றும் தீவிரம் இதற்குக் காரணமாகின்றது.

வானிலை மற்றும் காலநிலை மாற்றம் திசையன் மூலம் பரவும் நோய்த்தொற்றுகளின் உயிரியல் மற்றும் விநியோகத்தைப் பாதிக்கும். 'உதாரணமாக, வெப்பநிலை மாற்றங்கள், உலகளாவிய காற்று மற்றும் மழைப்பொழிவு முறைகள் மற்றும் மிதமான காலநிலையில் ஈரப்பதத்தில் ஏற்படும் மாற்றங்கள் ஆகியவை பூச்சிகளின் இனப்பெருக்கத்தை பாதிக்கலாம் மற்றும் அதன் அடர்த்தியை அதிகரிக்கலாம்,' என்று அவர் கூறினார்.

2030 மற்றும் 2050 இற்கு இடையில், காலநிலை மாற்றம், ஊட்டச்சத்து குறைபாடு, மலேரியா, வயிற்றுப்போக்கு மற்றும் வெப்ப அழுத்தம் ஆகியவற்றால் ஆண்டுக்கு சுமார் 250,000 இறப்புகளை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2030 ஆம் ஆண்டளவில், ஆரோக்கியத்துக்கான நேரடிசேதச் செலவுகள் (விவசாயம் மற்றும் நீர் மற்றும் சுகாதாரம் போன்ற ஆரோக்கியத்தை நிர்ணயிக்கும் துறைகளில் ஏற்படும் செலவுகளைத் தவிர்த்து), 2 முதல் 4 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார். (05)



# நீராடச் அழைத்துச் சொல்லப்பட்ட யானை தடுமாறி 20 அடி உயரத்திலிருந்து வீழ்ந்தது

களனி கங்கையில் நீராடுவதற்காக அழைத்துச்செல்லப்பட்ட யானை ஒன்று சுமார் 20 அடி உயரத்தில் இருந்துவிழுந்துகாயமடைந்துள்ளதாக நவகமுவ பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த யானை சுமார் 70 வயதுடையது ஆகும்.

யானை பராமரிப்பாளர்கள் குழுவினர்களால் களனி கங்கையில் நீராடுவதற்காக மாப்பிட்டிகிராமத்தின் பாலத்தின் ஊடாக களனி கங்கைக்கு குறித்த யானை அழைத்துச்செல்லப்பட்டுள்ளது.

யானை நீராடி முடித்து சென்ற போது எதிர்பாராத விதத்தில் யானை பாலத்திலிருந்து கீழே விழுந்துள்ளது.

இந்நிலையில், சம்பவ இடத்துக்கு வந்த கால்நடை வைத்திய அதிகாரிகள் பாரந்தூக்கியின் உதவியுடன் யானையை மீட்டு லொறி ஒன்றில் ஏற்றி மேலதிக சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளதாக நவகமுவ பொலிஸ் உயர் அதிகாரி தெரிவித்தார். (05)

# இஸ்ரேலின் போர் குற்றம் எதுவரையும் தொடரும்?...............

(4ஆம் பக்கத் தொடர்ச்சி....)



**தோல்வியான ஐ.நா.சபை தீர்மானம்:**

ஐ.நா. சபையின் 75 ஆண்டு கால வரலாற்றில் பாலஸ்தீனத்திற்கு உரிய நியாயத்தை உறுதி செய்வதில், ஐக்கிய நாடுகள் சபை அப்பட்டமாக தோல்வியடைந்துள்ளது. ஐ.நா. சபையில் பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக கொண்டு வரப்பட்ட ஒரு தீர்மானத்தைக்கூட அமெரிக்கவும், மேற்குலக நாடுகளும் ஆதரித்ததில்லை.

மாறாக, இஸ்ரேலை பயன்படுத்தி வளைகுடா பிரதேசத்தில் நிரந்தரமான பதற்றத்தை நிலவச் செய்வதில் அமெரிக்கா வெற்றி பெற்றுள்ளது என்றே கருதலாம்.

தற்போது இஸ்ரேலில் ஆட்சியில் உள்ள அதிதீவிர வலதுசாரியான பெஞ்சமின் நேதன்யாகு தலைமையிலான அரசு, பாலஸ்தீனத்தையே முற்றாக அழிப்பது என்ற நோக்கத்துடன் மேற் கொண்ட நகர்வுகள், ஹமாஸ் உள்ளிட்ட பாலஸ்தீன மக்களின் இயக்கங்களுக்கு அதிர்ச்சியை மட்டுமின்றி, பெரும் அழுத்தங்களையும் ஏற்படுத்தியது.

இதனாலேயே இஸ்ரேலின் வலுவான உளவு அமைப்புகளின் கண்களில் மண்ணைத் தூவி, அதிரடியான தாக்குதலை நடத்தியுள்ளது ஹமாஸ் இயக்கம். இதற்கு இஸ்ரேல் தரப்பில் எதிர்வினை கடுமையாக இருக்கும் என்பது தெரிந்ததே. போரை அறிவித்து காசாவை இன்னும் கடுமையாக தாக்கி வருகிறது இஸ்ரேல்.

ஹமாஸ் தரப்பு தாக்குதல் நடத்தினால் அது தீவிரவாத தாக்குதல் என்றும் (வீளஷஷலிஷ்ஷவிமி புமிமிழிஉவ) ஆனால் இதே தாக்குதலை வருடம் முழுவதும் இஸ்ரேல் நடத்தினால் அதற்குப் பெயர் சுற்றிவளைப்பு-முற்றுகை (Israel raids on Palestinian territory) என உலகின் மிகப்பெரிய சர்வதேச ஊடகங்கள் தொடர்ந்தும் சொல்லி வருகின்றன.

**காஸா போரல் உருக்குலைகிறது**

தற்போது இராணுவ முற்றுகைக்குள் காசா முடங்கி,இஸ்ரேலின் போர்க் குற்றம் தொடர்கிறது. உலகின் மனச்சாட்சியும் மௌனித்திருக்க, ஐ.நா.சபையின் தோல்வியை வெளிப்படுத்தும் வண்ணம் இஸ்ரேலின் கோரத் தாண்டவம் அரங்கேறுகிறது

நாங்கள் காசாவை முழுவதுமாக முற்றுகையிடுகிறோம், மின்சாரம் வழங்கப்படாது, உணவு வழங்கப்படாது, தண்ணீர் வழங்கப்படாது,எரிவாயு வழங்கப்படாது, அனைத்தும் மூடப்படும். என இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் யோவ் கேலண்ட் அதிகார பூர்வமாக அறிவித்தார். நாங்கள் விலங்குகளுடன் போராடுகிறோம், அதன்படி செயல்படுகிறோம் என்று ஹீப்ரூ மொழியில் அவர் கூறியுள்ளதுடன், காசா மீது முழு முற்றுகையை இஸ்ரேல் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

ஏற்கனவே, காசா முனைக்கு பல்வேறு வசதிகளை தடுத்து நிறுத்தி உலகின் மிகப்பெரிய (நுஞ்ளஜ புஷ்ஷ ஊணஷஷ்விலிஜ) எனப்படும் திறந்தவெளி சிறையாகவே காசாவை இஸ்ரேல் வைத்துள்ளது. காசாவில் உள்ள 10 பாலஸ்தீனியர்களில் 7 பேர் அகதிகளாக பதிவு செய்யப்பட்டுள்ளனர். சொந்த நாட்டுக்குள்ளேயே அகதிகளாக வாழும் நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். ஆனால், இந்த முழு முற்றுகை ஒன்றும் காசாவுக்கு புதிதல்ல. ஏற்கனவே அங்கு 22 மணி நேரம் மின்சாரம் இருக்காது. இஸ்ரேல் அறிவிப்பால் தற்போது 24 மணி நேரமும் மின்சாரம் இருக்காது.

காசாவில் வறுமை மற்றும் உணவுப் பற்றாக்குறையால் 7 சதவீத குழந்தைகள் நீண்ட கால ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக வளர்ச்சி குன்றிய நிலையில் உள்ளனர். 60 சதவீத குழந்தைகள் இரத்த சோகையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என ஐ.நா தரவுகள் கூறுகின்றன.

**முடிவிலா நீண்ட துயரில் பாலஸ்தீனம்**

தற்போது உணவு, எரிபொருள் மற்றும் மருந்து பொருள்கள் எதுவும் உள்ளே செல்ல இயலாதவாறு இஸ்ரேல் முழுமையாக காஸாவை முற்றுகை செய்துள்ளது. ஏற்கெனவே இருந்த எகிப்து ஊடான ஒரே வழியும் அடைப்பட்டுவிட்டது. காஸாவின் மருத் துவமனைகளில் போதிய மருந்து பொருள்கள் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த சூழலில், போர் குற்றத்தின் கீழ் வரும், மனித நேயத்திற்கு எதிரான, மின்சாரம் வழங்கப்படாது; உணவு வழங்கப்படாது; தண்ணீர் வழங்கப்படாது; எரிவாயு வழங்கப்படாது; அனைத்தும் மூடப்படும் என இஸ்ரேல் அறிவித்துள்ளமைக்கு

பல கீழைத்தேய நாடுகள் கண்டனங்களை முன்வைத்துள்ளன. ஆயினும் இஸ்ரேலின் தொடரும் போர் குற்றங்களும் மேற்கு உலகின் மௌனமும் ஐ.நா.சபையின் தோல்வி.



**இஸ்ரேலை கண்டிக்காத வல்லாதிக்க நாடுகள்**

இன்றைக்கு இஸ்ரேல் மீதான தாக்குதலுக்குக் கண்டனம் தெரிவிக்கும் உலக வல்லாதிக்க நாடுகள், உலகப் பெரும் தலைவர்கள், பன்னாட்டு அமைப்புகள் பாலஸ்தீனத்தின் மீது பல ஆண்டுகளாகத் தாக்குதல் நடத்திவரும் இஸ்ரேலைக் கண்டிக்காது அமைதி காத்து வருகின்றன.

தற்போது பாலஸ்தீன ஹமாஸையும் வெறும் பயங்கரவாத இயக்கமாக மட்டுமே உலக நாடுகள் சித்தரித்து வருகின்றனவே அன்றி பாலஸ்தீன போராட்டத்தின் நியாயத்தை எவரும் உணரவில்லை. போரினால் மக்கள் பேரிழப்பைச் சந்திக்க நேரிடும் என்பதையும், போர் மட்டுமே நிரந்தரத் தீர்வில்லை என்பதனையும் இஸ்ரேலும் இன்னமும் உணரவில்லை.

காஸா பகுதியை 2007 முதல் அதிகாரத்தில் வைத்திருக்கும் ஹமாஸை ஒடுக்கும் செயலில் மேலும் இஸ்ரேல் தீவிரம் காட்டி வருகிறது. இந்தப் போர்ச் சூழலால், காஸாவில் பல லட்சம் மக்கள் வீடுகளை இழந்து அகதிகளாகி உள்ளனர் என்று ஐ.நா. தெரிவிக்கிறது.

2008 ஆம் ஆண்டுக்குப் பிறகு 50,000 குழந்தைகள் உட்பட 1,50000க்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் இஸ்ரேல் அரசால் கொல்லப்பட்டுள்ளனர். அத்துடன் தடை செய்யப்பட்ட பாஸ்பரஸ் கொத்து குண்டுகளைப் போட்டு அப்பாவி பாலஸ்தீன மக்களை அழித்தொழிக்கும் இஸ்ரேலை உலக நாடுகள் இதுவரை தடுத்து நிறுத்தாதது ஏன் என்பதும் கவலைக்குரியதே.

**இஸ்ரேல் நசுக்கும் பாலஸ்தீன கனவு**

என் ஒரு கையில் துப்பாக்கி இருக்கிறது, மறு கையில் அமைதியைக் குறிக்கும் ஒலிவ் இலை இருக்கிறது, எதைத் தூக்க வேண்டுமென்று நீங்கள்தான் முடிவு செய்ய வேண்டும் என்று ஐ.நா. மன்றில் தோன்றி உலகத்தின் முன் வரலாற்றுச் சிறப்புமிக்கப் பேருரையை ஆற்றிய பாலஸ்தீன முன்னைய அதிபர் யாசர் அராபத்திற்கு உலக நாடுகள் முன்னிலையில் அளித்த உறுதிமொழியைக் காலில் போட்டு மிதித்து, பாலஸ்தீன விடுதலைக் கனவை நசுக்கி உள்ளது இஸ்ரேல். ஆயினும் இஸ்ரேல் மீது இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்பது எல்லோருக்கும் புரியும்.

தற்போது பாலஸ்தீனத்தின் காசா முனைக்கு எதிராக முழு முற்றுகையை இஸ்ரேல் அறிவித்துள்ளது. இது ஒரு போர் குற்றம் என கூறப்படுகிறது. அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட மேற்குலக நாடுகளின் உதவியுடன் இயங்கும் இஸ்ரேல், பொதுவாகவே வரம்புகளை மீறிச் செயல்படும் என்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படும் நிலையில், அடிப்படை வசதிகள் அனைத்தும் காசாவில் முடக்கப்படும் என மீண்டும் அறிவித்துள்ளது.

இஸ்ரேல் அறிவித்தது ஒரு போர்க் குற்றம் என்பதும், மனித குலத்திற்கு எதிரான குற்றத்துக்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பை அந்நாடு வெளியிட்டுள்ளமை பல மனித உரிமை அமைப்புக்கள் கண்டித்துள்ளன.

**மீண்டும் 1948 இன அழிப்பு?**

1948 மே 14 அன்று பிரிட்டன் பாலஸ்தீனத்தை விட்டு வெளியேறியவுடன், ராணுவத்தை கொண்டிருந்த யூதர்கள், அமெரிக்க உதவியுடன், பாலஸ்தீனத்தின் பெரும்பகுதியைக் கைப்பற்றினர். சுமார் 15000 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். மிகப் பெரிய அளவில் இனஒழிப்பு நடவடிக்கைகள் பாலஸ்தீனர்களுக்கு எதிராக அப்போது நடத்தப்பட்டது. ஏழு இலட்சம் பாலஸ்தீனர்கள் தங்கள் மூதாதையர் வீடுகளிலிருந்து விரட்டப்பட்டனர். ஆயிரக்கணக்கான பாலஸ்தீன கிராமங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. இவையனைத்தும் அமெரிக்க ஆதரவுடன் நடை பெற்றன. அதே தினத்தில் யூதர்கள் இஸ்ரேல் என்ற நாட்டை அறிவித்தனர்.

இந்த இன அழிப்பின் பினனர் அனைத்து ஆவணங்களிலும் இருந்த 'பாலஸ்தீனம்' என்ற பெயரை அழித்தனர். இந்த தினத்தை பாலஸ்தீனர்கள் அல்-நக்பா என்றழைக்கின்றனர். நக்பா என்றால் பேரழிவு என்று அர்த்தம்.

அதேபோன்று மீண்டுமொரு இன அழிப்புன் தொடக்கமாகவே காசா முழுவதுமான இஸ்ரேலிய இராணுவ முற்றுகையில் உள்ளது. மின்சாரம் வழங்கப்படாது, உணவு வழங்கப்படாது, தண்ணீர் வழங்கப்படாது, எரிவாயு வழங்கப்படாது அனைத்தும் மூடப்பட்டுள்ளதாக இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் யோவ் கேலண்ட் விடுத்த அதிகாரப்பூர்வ அறிவிப்பானது,பேரழிவு தொடங்கிவிட்டதை வெளிப்படுத்துகிறது.

முழு முற்றுகைக்குள் காசா முடங்கி, இஸ்ரேலின் போர் குற்றம் தொடர்கிறது. உலகின் மனச்சாட்சியும் மௌனித்திருக்க, ஐ.நா.சபையின தோல்வியை வெளிப்படுத்தும் வண்ணம் இஸ்ரேலின் கோரத் தாண்டவம் அரங்கேறுகிறது.

# மின்சாரம் மற்றும் சக்திவலு துறைகளின் செயற்திறனை கட்டமைப்புசார் மறுசீரமைப்புகள் மூலம் அதிகரிக்குக

## நாணய நிதிய ஆசிய, பசுபிக் திணைக்கள பணிப்பாளர் கோரிக்கை

உரியவாறான கட்டமைப்புசார் மறுசீரமைப்புக்கள் மூலம் மின்சாரம் மற்றும் சக்திவலு ஆகிய துறைகளின் செயற்திறனை உடனடியாக அதிகரிக்கவேண்டும் எனவும், இலங்கையைப் பொறுத்தமட்டில் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் மறுசீரமைப்பு இன்றியமையாதது எனவும் சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய, பசுபிக் திணைக்களப் பணிப்பாளர் கலாநிதி கிருஷ்ணா ஸ்ரீனிவாசன் வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் வருடாந்த மாநாடு மொரோக்கோவின் மரகேச் நகரில் கடந்த 9 ஆம் திகதி ஆரம்பமாகியிருக்கும் நிலையில், அதன் ஓரங்கமாக ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்தின் பொருளாதார நிலைவரம் தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பு வெள்ளிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அச்சந்திப்பில் இலங்கையின் பொருளாதார நிலைவரம் குறித்து எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே கிருஷ்ணா ஸ்ரீனிவாசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறிப்பாக இலங்கையில் அண்மைய காலங்களில் வெகுவாக அதிகரித்துவரும் பொருள்களின் விலைகள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் தவறான முறையில் பயன்படுத்துவதாக மக்கள் மத்தியில் நிலவும் விமர்சனம் என்பன தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த கிருஷ்ணா ஸ்ரீனிவாசன், வருமான வீழ்ச்சி மற்றும் வாழ்க்கைச்செலவு அதிகரிப்பு போன்றவற்றின் விளைவாக இலங்கை மக்கள் முகங்கொடுத்திருக்கும் நெருக்கடிகளைத் தாம் புரிந்துகொள்வதாகவும், அதுகுறித்து பெரிதும் கரிசனை கொள்வதாகவும் தெரிவித்தார். இருப்பினும் சர்வதேச நாணய நிதியத்தின் உதவிச்செயற்திட்டத்தின் பிரகாரம் செலவினங்களை ஈடுசெய்யக்கூடிய விலையிடல் முறைமை அவசியம் என்றும் வலியுறுத்தினார்.

'அது ஏன் அவசியம்? ஏனெனில், அவ்வாறு செய்யாவிடின் மின்சாரத்துறை நட்டமடைய நேர்வதுடன் அது மக்களைப் பாதிக்கக்கூடிய பெரும் பிரச்சினையாக மாற்றமடையும். எனவே செலவினங்களை ஈடுசெய்யவேண்டும். அது மிக அவசியமென நான் கருதுகிறேன். அதேவேளை நீங்கள் அனைத்துத் தரப்பினருக்கும் நிதி அல்லது மானிய உதவிகளை வழங்கவேண்டிய அவசியமில்லை. மாறாக அது இன்னமும் செயற்திறன்மிக்க விதத்தில் முன்னெடுக்கப்படவேண்டும். அதன்படி வறிய மற்றும் நலிவுற்ற மக்களுக்கான இலக்கிடப்பட்ட உதவிகளே இதற்கான தீர்வாக அமையும்' என்று கிருஷ்ணா ஸ்ரீனிவாசன் சுட்டிக்காட்டினார்.

மேலும் உரியவாறான கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புக்கள் மூலம் மின்சாரம் மற்றும் சக்திவலு ஆகிய துறைகளின் செயற்திறனை உடனடியாக அதிகரிக்கவேண்டும் என்றும், இலங்கையைப் பொறுத்தமட்டில் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் மறுசீரமைப்பு இன்றியமையாதது என்றும் வலியுறுத்திய அவர், அதற்கான அழுத்தத்தைத் தாம் வழங்குவதாகவும் குறிப்பிட்டார்.

அதேபோன்று இலங்கைக்கும் சீன ஏற்றுமதி, இறக்குமதி வங்கிக்கும் (எக்ஸிம் வங்கி) இடையில் அண்மையில் எட்டப்பட்டிருக்கும் இணக்கப்பாடு செயல்வடிவம் பெறுவதற்குத் தாமதமாகலாம் என்று கூறப்படும் நிலையில், இது சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட கடன்தொகை விடுவிக்கப்படுவதில் தாமதத்தை ஏற்படுத்துமா? என்று கிருஷ்ணா ஸ்ரீனிவாசனிடம் வினவப்பட்டது.

அதற்குப் பதிலளித்த அவர் -

'சர்வதேச நாணய நிதியத்தின் உதவிச் செயற்திட்டத்தைப் பொறுத்தமட்டில், நிதியியல் உத்தரவாதம் என்பது இன்றியமையாததாகும். அதன்படி கடன்மறுசீரமைப்பு முயற்சிகளில் எத்தகைய முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது என்றும், ஏதேனும் உடன்படிக்கைகள் எட்டப்பட்டிருந்தால் அதனை எவ்வாறு அடுத்தகட்டம் நோக்கி நகரப்போகின்றது என்றும் நாம் அவதானிப்போம். இது இரண்டாம் கட்ட மதிப்பீட்டு செயன்முறையின் ஓரங்கமாகும். இங்கு ஒரு கடன்வழங்குநர் (சீனா) தொடர்பில் மாத்திரமே கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. ஆனால் நிதியியல் துறை மதிப்பீட்டின்போது தனியார் கடன்வழங்குநர்கள், உத்தியோகபூர்வ கடன்வழங்குநர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினருடனும் எவ்வாறான மறுசீரமைப்பு எட்டப்பட்டிருக்கின்றது என்றே ஆராயப்படும்' என்று தெரிவித்தார்.

மேலும் கடன்வழங்குநர் மற்றும் கடன்பெறுநருக்கு இடையிலான கடன் மறுசீரமைப்பு செயன்முறையில் தாம் தலையிடமாட்டோம் எனவும், ஆகவே தனியார் கடன்வழங்குநர்கள் கடன்மறுசீரமைப்பு யோசனையொன்றை முன்வைத்தால் அதனை இலங்கை அதிகாரிகள் மற்றும் அவர்களது ஆலோசகர்களே கையாளவேண்டும் எனவும் கிருஷ்ணா ஸ்ரீனிவாசன் குறிப்பிட்டார். (05)

# ரணிலின் சீன பயணத்தின் பின்பேளு புதிய சுற்றாடல் அமைச்சர் நியமனம்

*சீனாவுக்கான விஜயத்தை நிறைவுசெய்த பின்னரே தற்போது வெற்றிடமாக உள்ள சுற்றாடல் அமைச்சர் பதவிக்கு புதிதாக ஒருவரை நியமிப்பது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானிப்பாரென அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. முன்னாள் சுற்றாடல் அமைச்சராக இருந்த நசீர் அஹமட் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உறுப்புரிமையிலிருந்து நீக்கப்பட்டதையடுத்து, நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் அமைச்சுப் பதவியையும் இழந்தார். அதனைத் தொடர்ந்து, அமைச்சர் எவரும் நியமிக்கப்படாத நிலையிலிருந்த சுற்றாடல் அமைச்சு, அரசமைப்பு விதிகளின்படி, ஜனாதிபதியினது கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்பட்டது. இந்நிலையில், தற்போது சீனாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பிய பின்னர், புதிய சுற்றாடல் அமைச்சர் ஒருவரை நியமிக்கவுள்ளார் என அரசாங்கத்தரப்பு தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (05)*




காலைக்கதிர் Kalaikkathir



# கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்

## Ishwaryam Banquet Hall



**Tel:- 021 228 3701, 071 7354308**

**Whatsapp:- 071 7736 4308**

**No.315, Kandy Road, Kilinochchi**




- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





### FULL OPTION

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable In Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| Ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

**BEVERAGES**

| | |
|---|---|
| JUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swehpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

காலைக்கதிர் Kalaikkathir

# புனரமைக்கப்பட்டு அபிவிருத்தி செய்த குளங்கள் விவசாயிகளிடம் ஒப்படைப்பு

## வாகரையில் நிகழ்வு



மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரைப் பிரதேச செயலாளர் பிரிவில் தூர்ந்துபோயுள்ள குளங்களை நீர்ப்பாசனம் செய்யக்கூடிய வகையில் புனரமைப்புச் செய்து, அவற்றை பிரதேச விவசாயிகளிடம் கையளிக்கும் நிகழ்வுகள் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றன.

'எங்களது செயற்பாடு எங்களது எதிர்காலம் - பெண்களையும் விவசாயிகளையும் வலுப்படுத்துவோம்' எனும் தொனிப்பொருளில் ஆரம்பிக்கப்பட்ட இந்த செயற்றிட்டத்துக்கு அமைவாக வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள திக்கனைக்குளம், மாணிக்கம்குளம், பனிச்சங்கேணிக் குளம் ஆகிய மூன்று குளங்களும் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

சுவீடன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு (வீஎபெக்ற்), கொகாகோலா பவுண்டேஷன், இளைஞர் அபிவிருத்தி அகம் ஆகியவை கூட்டிணைந்து இந்த அபிவிருத்தித் திட்டத்தை முன்னெடுத்துள்ளன.

'பெண்கள், சிறுவர்கள் உட்பட 1,772 வறுமைக்குட்பட்ட குடும்பங்களை நேரடி இலக்காகவும் 2043 குடும்பங்களை மறைமுக இலக்காகவும் கொண்டு நன்மை பெறும் வகையில் அவர்களது மேம்பட்ட வாழ்க்கையை உறுதி செய்வது இந்தத் திட்டத்தின் இலக்காகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை பிரதேசத்திலுள்ள 1000 குடும்பங்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்குவதும் இதன் பிரதான நோக்கங்களில் ஒன்றாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குளங்களில் தேக்கப்படும் நீர் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள இவ்வாண்டின் பெரும்போக நெற்செய்கைக்காக விவசாயிகளால் நீர்ப்பாசனத்துக்குப் பயன்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வை ஆரம்பித்துவைத்து உரையாற்றிய சுவீடன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு (வீ எபெக்ற்) நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் தேவசிகாமணி மயூரன் -

'எல்லா அபிவிருத்தித்திட்டங்களை விடவும் குளங்களை புனரமைப்புச் செய்தல் என்பது அதிக சிரத்தை எடுத்துச் செய்ய வேண்டியதாகும்.

இப்பிரதேச விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் இந்த வேலைத்திட்டத்தை செய்து முடிக்கக்கூடியதாக இருந்தது.

அத்தோடு பெண்கள் அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, வாழ்வாதாரம், மனைப் பொருளாதார தொழில் உற்பத்தித் திறன்கள் உள்ளிட்ட ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டத்துக்காக மேலும் 21 மில்லியன் ரூபா செலவில் வாகரையில் அபிவிருத்தித் திட்டங்கள் அமுலாகிறது' - என்றார்.

புனரமைப்புச் செய்யப்பட்ட குளங்களை மக்கள் பாவனைக்காகக் கையளிக்கும் நிகழ்வில் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், மட்டக்களப்பு மேலதிக அரசாங்க அதிபர் சுதர்ஷினி ஸ்ரீகாந்த், கொகாகோலா பவுண்டேஷன் அமைப்பின் இலங்கை மாலைதீவு நாடுகளுக்கான பிராந்திய இணைப்பாளர் லக்ஷான் மதுரசிங்ஹ, சுவீடன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு (வீ எபெக்ற்) நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் தேவசிகாமணி மயூரன், வாகரை பிரதேச செயலாளர் ஜி.அருணன், விவசாய, நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள், இளைஞர் அபிவிருத்தி அகம் அமைப்பின் அலுவலர்கள் உட்பட இன்னும் பல அதிகாரிகளும் பிரதேச மக்களும் கலந்துகொண்டனர்.(05)

# இணையத்தளம் ஊடாக வேலை வாய்ப்பு தருவதாக பண மோசடி செய்தவர் கைது

இணையத்தளங்கள் மூலம் வேலை வாய்ப்புக்கள் பெற்றுத் தருவதாக கூறி 90 லட்சம் ரூபா பண மோசடி செய்த நபர் கொழும்பு ஊழல் தடுப்பு விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் 34 வயது கரந்தெனிய, தெனகொட பிரதேசத்தை சேர்ந்தவர் ஆவார்.

குறித்த நபர் தொடர்பான முறைப்பாடுகளின் அடிப்படையில் ஊழல் தடுப்பு விசாரணைப் பிரிவினரால் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபருக்கு 3 வங்கிக் கணக்குகள் மற்றும் 72 லட்சம் ரூபா பணம் இருப்பதாகவும் ஊழல் தடுப்பு விசாரணைப் பிரிவு அதிகாரிகளின் விசாரணைகளின் போது தெரிய-வந்துள்ளது.

இதனையடுத்து குறித்த நபர் வெள்ளிக்கிழமை கல்கிசை நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இந்நிலையில், அவரை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது. (05)

# திருகோணமலை கடலில் ஒதுங்கும் அதிக கடற்பாசி

## சிரமங்களை எதிர்கொள்ளும் மீனவர்கள்



திருகோணமலை கடலில் ஒதுங்கும் கடற்பாசியால் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் மிகவும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலை கடற்பகுதியில் தற்போது கடற்பாசி ஒதுங்குவதால் மீன்பிடியில் ஈடுபடுகின்ற மீனவர்களின் வலையில் பொருமளவில் கடற்பாசிகளே சிக்குவதாகவும் இதனால் மீன்பிடியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாக தங்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் பாசியால் வலையை இழுக்க முடியாதுள்ளதாகவும், வலையை சுத்தம் செய்வதற்கே அதிக நேரம் செலவாவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்து வருகின்ற திருகோணமலை கடற்கரை, தற்போது பாசிகள் ஒதுங்கி அழகு குன்றி காணப்படுவதையும் அவதானிக்க முடிகிறது. (05)


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

JRIDE
BEYOND THE ROAD

# ஜே ரைட்
## ஒன்லைன் ரக்சி அப்
## ONLINE TAXI APP FROM JAFFNA

ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.

**நாங்கள் தயாராகிவிட்டோம்!**

யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)

உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.

இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!




இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!

YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE

GET IT ON Google Play
Download on the App Store






+94 21 222 8358

JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

காலைக்கதிர் Kalaikkathir

# கொழும்பு இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்திய 'மீண்டும் பள்ளிக்கு' நிகழ்வு!

பழைய மாணவர்களின் பள்ளிப் பருவத்தை மீண்டும் மீட்டிப் பார்க்கும் 'பேக் டூ ஸ்கூல்' எனப்படும் 'மீண்டும் பள்ளிக்கு' நிகழ்வு கொழும்பு 04 - பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள 'கொழும்பு இந்துக் கல்லூரியில்' கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் கல்லூரி அதிபர் மு. நாகேந்திரா தலைமையில் நடைபெற்றது.

இதன்போது கடந்த காலங்களில் பாடசாலையில் கல்வி கற்பித்த 50 இற்கு மேற்பட்ட ஆசிரியர்களும், கல்வி கற்ற 500 இற்கு மேற்பட்ட பழைய மாணவர்களும் சிறப்பதிதிகளாக முன்னாள் அதிபர் ரி. முத்துக்குமாரசுவாமி மற்றும் முன்னாள் உப அதிபர் ரி. இராஜரட்ணம் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

தேசியக் கொடி, பாடசாலைக் கொடி, நந்திக் கொடி ஏற்றப்பட்டதோடு அதிபரால் பாடசாலை நினைவுத் தூபிக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கல்லூரி பிரதான மண்டபத்தில் சம்பிரதாய பூர்வமாக மீண்டும் பள்ளிக்குநிகழ்வுஆரம்பித்துவைக்கப்பட்டதோடு பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் முகமாக பாடசாலையின் பழைய மாணவரும் ஜடிஎம் நேசன் கம்பஸ் இன் அதிபருமாகிய விநாயகமூர்த்தி ஜனகனால் ஒரு மில்லியன் ரூபாவுக்கான நிலையான வைப்புச்சான்றிதழ் பழைய மாணவர் சங்க செயலாளர் சு. இளங்கோவிடம் கையளிக்கப்பட்டது.

மேலும் பிரித்தானிய பழைய மாணவர் சங்கத்தினரால் பாடசாலையில் தற்போது கல்வி பயிலும் விளையாட்டுக்களில் திறமையுடைய 10 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் என்ற உத்தியோகபூர்வ இணையத்தளமும்ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இதன் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பாடசாலை அதிபர் மு. நாகேந்திரா –

பாடசாலையின் வளர்ச்சியில் பழைய மாணவர்கள் பெரும்பங்கு வகிப்பதைக் குறிப்பிட்டதோடு ஏனையவர்களுக்கும் பாடசாலை வளர்ச்சியில் பங்குபற்ற வருமாறு அழைப்பு விடுத்தார்.

அதன்பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் ஆர். இளங்கோ கருத்து தெரிவிக்கையில் –

ஏனைய நாடுகளில் செயற்பாட்டில் உள்ள பழைய மாணவர் சங்கங்களின் மூலம் எமது பாடசாலையின் வளர்ச்சியில் பாரிய மாற்றத்தைக் கொண்டு வர முடியும் என்றும்







அதற்கு அனைத்து பழைய மாணவர்களும் ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றதோடு இந்த நிகழ்வுகளைத் திறம்பட ஒருங்கிணைத்து நடத்திய பழைய மாணவர் சங்கத்தின் நிர்வாக உப தலைவர் லக்ஷயன் முத்துக்குமாரசுவாமி உட்பட அனைத்து பழையமாணவர்சங்கஅங்கத்தவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்தார். (05)

# யாழ்ப்பாண விமானநிலையத்தின் ஊடாக விவசாய உற்பத்தி ஏற்றுமதிக்கு ஏற்பாடு!

## அங்கஜன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம் விமான நிலையம், துறைமுகங்கள் ஊடாக விவசாய உற்பத்திகளின் ஏற்றுமதிக்கு ஏற்பாடுகள் செய்து தரப்பட வேண்டும் என யாழ். மாவட்டநாடாளுமன்றஉறுப்பினர் அங்கஜன் இராமநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணமாவட்டவிவசாய குழு கூட்டம் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தலைமையில் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில்இடம்பெற்றபோதுகருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக கடந்த 10 ஆண்டுகளின் உருளைக்கிழங்கு அறுவடைகளில்அதிகப் படியானஅடைவுமட்டம் 2019 ஆம் ஆண்டில் பதிவாகியுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே எமது விவசாயிகளுக்கு உள்ளூர் விதை உருளைக்கிழங்குகளைப்பெற்று வழங்குவதற்கு அமைச்சர் உதவி செய்ய வேண்டும் எனவும் அதேவேளை எமது விவசாயிகளின்உற்பத்திகளுக்கானஏற்றுமதி வாய்ப்பை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உற்பத்திகளுக்கான பெறுமதி சேர்க்கும் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ளது. உள்ளூர் ஏற்றுமதிச் சந்தைகளைத் தாண்டி ஐரோப்பா உள்ளிட்ட சர்வதேச சந்தைகளுக்கான ஏற்றுமதி வாய்ப்புகளை பெற்றுத்தர வேண்டும்.

தற்போது, இந்தியாவுடனான கடல் மற்றும் வான் வழி தொடர்புகளை யாழ்.மாவட்டம் கொண்டுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இந்திய சந்தை வாய்ப்புகளை எமது உற்பத்திகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்க முடியும்.

ஆகவே, கடந்த காலங்களில் எமது விவசாயத்துறைக்கு மேற்கொண்ட உதவிகள் போன்று தற்போதைய இந்தவாய்ப்புகளைப் பயன்படுத்தவும் உதவிகளைச் செய்ய வேண்டும் என அமைச்சர் மஹிந்த அமரவீரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.(05)



# 33 வருடத்தின்பின் சொந்த இடத்தில் இயங்கவுள்ள வலிகாமம் வடக்கு பிரதேச சபை உப அலுவலகம்

யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் காங்கேசன்துறை உபஅலுவலகம்மற்றும்பொதுநூலகம் என்பன சுமார் 33 வருடங்களின் பின்னர்,எதிர்வரும்புதன்கிழமைமுதல் சொந்த கட்டடத்தில் இயங்கவுள்ளதாக பிரதேச சபை அறிவித்துள்ளது.

யுத்தம் காரணமாக வலி, வடக்கில் இருந்து 1989 ஆம் ஆண்டு கால பகுதியில் மக்கள் இடம்பெயர்ந்த போது , அலுவலகம் மற்றும் நூலகம் என்பனவும் இடம்பெயர்ந்தன.

இடம்பெயர்ந்த நூலகம் மற்றும் அலுவலகம்என்பனயாழின்பல்வேறு பகுதிகளில் இயங்கி வந்த நிலையில் , 2016ஆம் ஆண்டு கால பகுதியில் காங்கேசன்துறை உள்ளிட்ட சில பகுதிகள் விடுவிக்கப்பட்ட நிலையில் மக்கள் மீள் குடியேற தொடங்கினர்.

அக்கால பகுதியில் காங்கேசன் துறையில் சில பகுதிகள் விடுவிக்கப்பட்ட போதிலும், வடக்கு பிரதேச சபை அலுவலக கட்டடம் இராணுவ கட்டுப்பாட்டு பகுதிக்குள் இருந்தமையால், காங்கேசன்துறை நடேஸ்வரா கல்லூரிக்கு அருகில் உள்ள தனியார் கட்டடம் ஒன்றில் வலி.வடக்கு பிரதேச சபையின் காங்கேசன்துறை உப அலுவலகம் மற்றும் பொது நூலகம் என்பன இயங்கி வந்தன.

இந்நிலையில் இந்த வருட ஆரம்ப கால பகுதியில் வலி. வடக்கு பிரதேச சபையின் கட்டடம் அமைந்துள்ள பகுதி உள்ளிட்ட சில பகுதிகளை இராணுவத்தினர் விடுவித்து இருந்த நிலையில், சுமார் 33 வருடங்களின் பின்னர் மீண்டும் எதிர்வரும் புதன்கிழமை முதல் தனது சொந்தக் கட்டடத்தில் வலி.வடக்கு பிரதேசசபை உப அலுவலகம் இயங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# வறட்சியாலும் பொருளாதார நெருக்கடியாலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கொடுப்பனவு

## யாழில் வழங்கி வைப்பு





விவசாய அமைச்சின் ஏற்பாட்டில்யாழ்ப்பாணமாவட்டத்தில்இந்த ஆண்டில் வறட்சியாலும்பொருளாதார வீழ்ச்சியாலும்பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான கொடுப்பனவுகள்வழங்கும் நிகழ்வு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) யாழ்ப்பாண மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் யாழ்ப்பாணமாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர கலந்துகொண்டு 40 விவசாயிகளுக்கான கொடுப்பனவுகளை முதற்கட்டமாக வழங்கி வைத்தார்.

அந்தவகையில், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தலா 2000 ரூபா முதல் 20 ஆயிரம் ரூபா வரை கொடுப்பனவாக வழங்கப்பட்டன.

அத்தோடு, புதிதாக விவசாய ஓய்வூதியக் கொடுப்பனவுக்காக மேலும் 5 பேர் இணைத்துக்கொள்ளப்பட்டனர்.

இந்தகூட்டத்தில்நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ், வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, பிரதேச செயலர்கள், துறைசார் திணைக்களத் தலைவர்கள், கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (05)



# அப்துல் கலாமின் 92ஆவது பிறந்த தின நிகழ்வு யாழில்



இந்தியாவின் மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஏ.பி.ஜெ.அப்துல் கலாமின் 92 ஆவது பிறந்த தின நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

யாழிற்கான இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பொதுசன நூலகத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அப்துல் கலாமின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலிசெலுத்தப்பட்டது.

இதன்போது, யாழ்ப்பாணத்துக்கான இந்தியதுணை தூதர்ராகேஷ்நட்ராஜ் ஜெயபாஸ்கரன், யாழ்.மாநகர சபை ஆணையாளர்.த.ஜெயசீலன்,பொதுசன நூலக பிரதம நூலகர் மற்றும் நூலக ஊழியர்கள், இந்திய துணை தூதரக அதிகாரிகள், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.10.2023இல் வெளியிடப்பெற்றது.